# தலையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள்

Translated from the original article, "Hold Fast The Head"

By *Watchman Nee*

"*எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி...சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற் கும் மேலான தலையாகத் தந்தருளினார்*" (எபேசியர் 1:22-23).

"*அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் அனைத்துக் காரியங்களிலும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுதும் அதற்கு ஆதரவாயிருக்கிற சகல கணுக்களினாலும் ஒன்றிணைக்கப்பட்டு, ஒவ்வொரு உறுப்பும் அதனுடைய அளவுக்குத் தக்கதாய்ச் செயல்படுகிறபடியே, அது வளர்ந்து அன்பினாலே கட்டியெழுப்பப்படுகிறது*" (எபேசியர் 4:15-16).

"*கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைம் பற்றிக்கொள்ளாமல்...*" (கொலேசெயர் 2:19).

கிறிஸ்துவை எல்லாக் காரியங்களுக்கும் தலையாக்குவதற்காக, தேவன் அவரை முதலாவது சபைக்குத் தலையாக்கினார். சபைக்குத் தலையாக்கப்பட்டபிறகு, அவருடைய அதிகாரம் பரந்துவிரிந்து அவர் எல்லா வற்றிற்கும் தலையாக்கப்படுவார். இந்தப் பிரபஞ்சத்தில் எதிர்காலத்தில் அவருடைய அந்தஸ்து என்ன வாக இருக்கும் என்பது இன்று சபையில் அவருடைய அந்தஸ்து என்ன என்பதோடு நெருங்கிய தொடர் புடையது. கிறிஸ்து எல்லாவற்றிற்கும் தலையாக இருப்பதற்குமுன், அவர் முதலாவது தம் பிள்ளைகளிடையே, அதாவது தம் சரீரமாகிய சபையில், இப்படிப்பட்ட தலையாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இந்த விஷயம் அளவிடமுடியாத அளவுக்கு எவ்வளவு முக்கியமான காரியம்! கிறிஸ்து சபையின் தலையாயிருக்கிறார், சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது, முழுச் சரீரமும் தலைக்குள் கூட்டம் பட்டிருக்கிறது. சரீரத்தில் எதுவும் தலைக்கு வெளியே வாழ முடியாது. நம் பௌதீக சரீரம் தலையிலிருந்து பிரிந்துவிட்டால், நம் சரீரத்திற்கு மரணம் சம்பவித்து விட்டது என்று பொருள். ஒரு மனிதனின் எல்லா அசைவுகளும் தலையால் கட்டுப்படுத்தப்படுகின்றன. தலைக்குக் காயம் ஏற்படும்போது அது தன் வீரியத்தை இழந்துவிடுகிறது; அப்போது சரீரத்தின் நடவடிக்கைகள் நின்றுபோய், கடைசியில் சரீரம் செத்துவிடுகிறது. ஏனென்றால், தலைதான் சரீரத்தினுடைய உயிரின் கட்டுப்பாட்டு மையம்

தேவனுடைய குமாரனை உடையவன் ஜீவனை உடையவன் என்று தேவனுடைய வார்த்தை பறைசாற்று கிறது (1 யோவான் 5:12). ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவிடமிருந்து ஜீவனைம் பெறுகிறான்; இருந்தபோதும், இந்த ஜீவன் கர்த்தரைவிட்டு ஒருபோதும் பிரிந்து போவதே யில்லை. குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; ஆனால், இந்த ஜீவன் குமாரனில் இருக்கிறது என்றும் (1 யோவான் 5:11), ஒரு கணப்பொழுதுகூட இந்த ஜீவன் குமாரனை விட்டுப் பிரிந்துபோக வில்லை என்றும் தேவனுடைய வார்த்தை கூறுகிறது. ஆகவே, கர்த்தராகிய இயேசு இல்லாமல் நம்மால் வாழ முடியாது.

தேவன் நமக்குக் கிறிஸ்துவின் ஒரு சிறிதளைவை மட்டுமே தந்திருக்கிறார் என்றும், நாம் அந்தப் பங்கை எடுத்துக்கொண்டு அதில் திருப்தியாயிருக்கலாம் என்றும் நினைக்க வேண்டாம்; தேவன் நமக்கு மொத்த கிறிஸ்துவைத் தந்திருக்கிறார்; அவர் நம்மைத் தம் குமாரனுடன் நெருக்கமாக இணைத்திருக்கிறார். நாம் வாழ்வதற்கான எல்லா வல்லமையும் கிறிஸ்துவில்தான் இருக்கிறது. நாம் கர்த்தரிடமிருந்து விலகிப் போனால், அவருடனான தொடர்பை இழந்துவிடுகிறோம்; அப்போது உடனே நாம் ஜீவனற்றவர்களாகி விடுகிறோம். இவ்வாறு, ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவிடமிருந்து ஜீவனைப் பெற்றுக்கொம் டாலுங்கூட, அது கர்த்தரில்தான் நிலைத்திருக்கிறது. நாம் இன்னும் அவரில்தான் வாழ வேண்டும். நாம் ஜீவனைப் பெற் றிருக்கிறோம்; இருந்தபோதும், இந்த ஜீவனையும் தலையையும் பிரிக்கமுடியாது. நாம் அவரை ஏற்நிருந் தாலுங்கூட, நாம் இன்னும் அவரில்தான் வாழ வேண்டும். நாம்

அவரைப் பெற்றிருந்தாலுங்கூட, நாம் இன்னும் அவரைத்தான் சார்ந்திருக்க வேண்டும். இதன்படி, நாம் ஒன்றிலும் சுயாதீனமாக இருக்க முடியாது. கர்த்தர் மட்டுமே தலை; அவர் மட்டுமே நம் ஜீவனின் ஒரே ஆதாரம்.

**தலையின் அதிகாரம்**

கிறிஸ்துவே சரீரத்தின் ஜீவன். அதின் தலை என்ற முறையில் அவரே அதின் அதிகாரமுமாவார். ஜீவன் அவரில் இருப்பதால், அதிகாரமும் அவரில்தான் இருக்கிறது. அவர் நம் ஜீவன்; ஆகையால் அவருக்கு அதிகாரம் உண்டு. நாம் அவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படியும்போது, நம்மிடம் ஜீவன் இருக்கிறது. ஆகவே, கிறிஸ்துவின் சரீரம் என்றால் என்னவென்பதை நாம் பார்த்தால், தலையின் கட்டுப்பாட்டை நம் மால் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியாது. ஏனென்றால், சரீரத்தின் அவயவங்கள் தங்கள் தங்கள் இஷ்டம் போல் அசைய முடியாது; மாறாக, தலையின் கட்டளைப்படிதான் அவைகள் அசைகின்றன. தலையி லிருந்து எந்தக் கட்டளையும் வரவில்லையென்றால், சரீரத்தில் எந்த அசைவும் இருக்காது. சரீரத்தின் எந்த அவயவமும் தானாகவே எதையும் ஆரம்பிக்க முடியாது; மாறாக, அது தலையினால் ஆளப்பட வேண்டும். எங்கு ஜீவன் இருக்கிறதோ, அங்கு அதிகாரம் இருக்கிறது. ஜீவனே உண்மையான அதிகாரம். கர்த்தர் நம் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதால், அவருக்கு நம்மேல் அதிகாரம் உண்டு.

“எனக்கு சரீர வாழ்க்கையைப்பற்றித் தெரியும்,” என்று ஒருவன் தன் வாயினால் அறிக்கைசெய்தால், அவன் தன்னைத்தானே ஒரு கேள்வி கேட்க வேண்டும்: “நான் கர்த்தருடைய அதிகாரத்துக்குப் பணிந் தடங்கியிருக்கிறேனா?” என்பதே அந்தக் கேள்வி. அவன் கர்த்தருடைய அதிகாரத்துக்குப் பணிந்தடங்கி யிருக்கிறானா இல்லையா என்பதுதான் உண்மையாகவே அவனுக்கு சரீர வாழ்க்கையைப்பற்றித் தெரி யுமா தெரியாதா என்பதை நிரூபிக்கும். “மெய்யாகவே கர்த்தர் இப்படித்தான் சொல்லியிருக்கிறார்; ஆனால், நான்...இப்படி நினைக்கிறேன்,” என்பதுதான் தேவனுடைய வார்த்தையைப் பொறுத்தவரை சிலருடைய மனப்பாங்காக இருக்கிறது. “ஆனால்” என்று சொல்ல யார் நம்மை அனுமதிப்பார்? “ஆனால்” என்று சொல்ல நமக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைத் தந்தது யார்? இந்த உலகத்தில், ஒருவன் தன் மேலதிகாரி யின் கட்டளையைப் பின்பற்றவில்லையென்றால், அவன் கீழ்ப்படியாதவன் என்று கருதப்படுவான். கிறிஸ்துவே தலை, நாம் அல்ல. எனவே, கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் இருக்க நமக்கு எந்த உரிமையும் கிடையாது.

“பின்பற்று” என்றால் என்ன பொருள்? நான் எந்த வழியில் நடக்க வேண்டும், நான் எந்த இடத்துக்குப் போக வேண்டும் என்ற காரியங்களெல்லாம் வேறொருவரால் தீர்மானிக்கப்படுகிறது என்பதுதான் இதன் பொருள். நாம் கர்த்தரைப் பின்பற்றுகிறோம். ஆகையால், நாம் போக வேண்டிய பாதையைத் தீர்மானிக் கும் எந்த அதிகாரமும் நமக்குக் கிடையாது. சரீரத்திற்கும் தலைக்கும் உள்ள உறவைப் பொறுத்தவரையில், சரீரம் தலைக்குக் கீழ்ப்படிய வேண்டும், தலையைப் பின்பற்ற வேண்டும். நாம் கிறிஸ்துவின் சரீர வாழ்க்கையை வாழ விரும்பினால், நாம் நம் தலையை மூடிக்கொள்ள வேண்டும்; அதாவது நம் தனிப் பட்ட அபிப்பிராயம், தன்முனைப்பான சித்தம் அல்லது சுயநலமான எண்ணம் ஆகியவைகள் இருக்கக் கூடாது. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும்; அவரைத் தலையாக இருக்க அனுமதிக்க வேண்டும். அவ்வளவே. கர்த்தர் மட்டுமே அந்த அந்தஸ்தில் இருக்க முடியும்; வேறு ஒருவனும் அந்த இடத்தில் இருக்க முடியாது. நான் தலையாக இருக்க முடியாது; சபையில் வேறு யாரும் தலையாக இருக்க முடியாது. ஏனென்றால், சரீரத்திற்கு ஒரேவொரு தலைதான் உண்டு; சரீரம் தலையாகிய கிறிஸ்துவுக்குப் பணிந்தடங்கியிருக்கிறது. ஆகையால், நாமெல்லாரும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

ஆனால், துரதிருஷ்டவசமாக, இன்று சபையில் அநேகத் தலைகளும், அநேகத் தலைவர்களும், மனிதர் களுடைய அநேக வழிகளும், சட்டதிட்டங்களும் இருக்கின்றன. பெரும்பாலும் தான் அதிகாரமாக இருக்க வேண்டும் என்று மனிதன் நாடுகிறான். கிறிஸ்து பரலோகத்தில் தலையாக இருக்கையில், மனி தன் பூமியில் தலையாக இருக்க விரும்புகிறான். பூமிக்குரிய தலையின் எண்ணம் பரலோகத் தலையின் எண்ணத்தோடு ஒத்துப்போகும்போது, நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ம்படிகிறோம். ஆனால், பூமிக்குரிய தலை

பரலோகத் தலையோடு ஒத்துப்போகவில்லையென்றால், நாம் கீழ்ப்படியமறுக்கிறோம். இந்த முழு அமைப்புமுறைமையும் எவ்வளவு தவறாக இருக்கிறது!

“கர்த்தாவே, நீரே என் தலை. எதையும் தீர்மானிக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை. எனக்கு விருப்ப மானதைத் தெரிந்தெடுக்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லை. நான் தலையாக இருக்க முயல்கிற என் முயற்சியிலிருந்தும், தங்களைத் தலைகளாக ஸ்தாபித்துக்கொள்கிற மற்ற மக்களிடமிருந்தும் என்னை விடுவிப்பீராக,” என்று நீங்கள் கர்த்தரிடம் எப்போதாவது ஜெபித்திருக்கிறீர்களா? கர்த்தருடைய கட்டளையை எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும்: கிறிஸ்துவே தலை; ஆகையால், ஒருவனும் தன் சொந்த சித்தத்தைப் பின்பற்ற முடியாது. கர்த்தரால் ஆட்கொள்ளப் பட்டு, அதன்பின் அவருடைய கட்டுப்பாட்டுக்குப் பணிந்தடங்குவது ஒவ்வொரு கிறிஸ்தவனின் அடிப்படை அனுபவமாக இருக்க வேண்டும்.

பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது, “ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசு வையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்,” (வ. 36) என்று பிரசங்கித்தார் என்று நடபடிகள் 2ஆம் அதிகரத்தில் நாம் பார்க்கிறோம். அவர் தன் வாயைத் திறந்து, “கிறிஸ்துவே ஆண்டவர்,” என்று பறை சாற்றினார். கிறிஸ்து இரட்சகர் மட்டும் அல்ல; அவர் முதலாவது ஆண்டவர். அவர் நமக்கு ஆண்டவராக இருக்க வேண்டும். நாம் பாவம் செய்திருக்கிறோம்; எனவே, அவர் நம் இரட்சகராகவும் இருக்க வேண்டும்.

பவுல் மனந்திரும்பியபோது அவனுக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சிந்தித்துப் பாருங்கள். அவன் தமஸ்கு வுக்குச் சென்றுகொண்டிருந்த வழியில், ஆண்டவர் அவனைச்சுற்றிப் பிரகாசித்தார். உடனே, அவன் அவரிடம், “ஆண்டவரே, நீர் யார்?” (அப். 9:5) என்று கேட்டான். அவன் இயேசுவை இரட்சகராக விசுவாசிப் பதற்குமுன், முதலாவது அவரை ஆண்டவராகப் பார்த்தான். “ஆண்டவரே, என் கதை முடிந்தது. இப்போ திலிருந்து என்னை வழிநடத்துகிறவர் நீரே. ஏனென்றால், நீரே என் ஆண்டவர்,” என்று நேர்மையாகச் சொல்லும் இடத்திற்கு நாமெல்லாரும் வர வேண்டும்.

**தலையுடன் நம் உறவு**

நாமெல்லாரும் தலையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும் என்பதை உணர வேண்டும். இப்படிச் செய்கிறோம் என்றால் கிறிஸ்துவே ஆண்டவர் என்று ஒப்புக்கொள்கிறோம் என்று பொருள்; அவருடைய அதிகாரத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிதல் என்று பொருள். “*அவராலே சரீரம் முழுதும் அதற்கு ஆதர வாயிருக்கிற சகல கணுக்களினாலும் ஒன்றிணைக்கப்பட்டு, ஒவ்வொரு உறுப்பும் அதனுடைய அளவுக் குத் தக்கதாய்ச் செயல்படுகிறபடியே, அது வளர்ந்து அன்பினாலே கட்டியெழுப்பப்படுகிறது*” (எபேசியர் 4:16).

கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அவயவங்களெல்லாம் தலையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, சரீர வாழ்க்கை வாழ்கின்றன; எனவே, அவைகள் ஒன்றாகச் சேர்த்து இணைக்கப்பட்டிருக்கின்றன என்று இந் தப் பத்தியிலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம். நீ உனக்கு அடுத்து இருப்பவனுக்கு மட்டும்தான் கவனம் செலுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதல்ல இதன் பொருள். மாறாக, எல்லாவற்றிற் கும் மேலாக நீ கர்த்தருடன் நேர்த்தியான உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதே இதன் பொருள். நீ தலையுடன் இப்படிப்பட்ட உறவை வைத்திருந்தால், சரீரத்தின் மற்ற அவய வங்களுடன் உனக்கு நல்ல உறவு இருக்கும். நீ தலைக்குப் பணிந்தடங்கினால், உனக்கும் உன் சகோ தர சகோதரிகளுக்கும் இடையேயுள்ள எல்லா விஷயங்களையும் எளிதாகத் தீர்த்துவிடலாம். கர்த்தரிடத் தில் உனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லையென்றால், எந்த சகோதர சகோதரியிடமும் உனக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது.

உன்னால் சரீர வாழ்க்கையை வெற்றிகரமாக வாழமுடியுமா முடியாதா என்பது தலையுடன் உனக்கு இருக்கும் உறவைச் சார்ந்திருக்கிறது. மற்ற கிறிஸ்தவர்கள் இணக்கமானவர்களாக இருந்ததால் நாம் கிறிஸ்தவர்களாக மாறவில்லை; ஒருவகையான கிறிஸ்தவ யுக்தியைக் கையாளுவதில் நாம் கைதேர்ந்த வர்களாகிவிட்டதால், விசுவாசிகள் என்ற முறையில் நாம் வெற்றிபெற்றுவிடவில்லை. நாம் கிறிஸ்துவை

அறிந்ததால், கிறிஸ்தவர்களாக மாறினோம். எந்த வழியில் நாம் கிறிஸ்தவர்களாகப் பிறந்தோமோ, அதே வழியில்தான் நாம் தொடர்ந்து வெற்றிகரமான கிறிஸ்தவர்களாக வாழ்கிறோம். தலையுடன் உறவுகொண் டதின்மூலம் நாம் பிறந்தோம்; தலையுடன் நேர்த்தியான உறவைப் பராமரிப்பதின்மூலம் நாம் தொடர்ந்து கிறிஸ்தவர்களாக இருக்கிறோம். ஆண்டவராகிய கிறிஸ்துவே இந்தத் தலை.

கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியம்கொள்ளத் தேவையில்லை என்று நான் கூறுவதாக எண்ண வேண்டாம். இல்லை; விசுவாசிகளுக்கிடையேயுள்ள ஐக்கியத்திற்கு அவர்கள் கிறிஸ்துவுடன் கொண்டிருக் கும் உறவே ஆதாரம் என்பதை இது உறுதிப்படுத்துகிறது, அவ்வளவுதான். நாம் ஒருவரோடொருவர் ஐக்கியம்கொள்ள வேண்டும்; ஏனென்றால், என்னில் வாசம்செய்கிற கிறிஸ்துவையும், உன்னில் வாசம் செய்கிற கிறிஸ்துவையும் பிரிக்க முடியாது. என்னில் வாசம்செய்கிற கிறிஸ்து ஒரு துண்டு கிறிஸ்துவல்ல, மாறாக முழுக் கிறிஸ்து. உன்னில் கிறிஸ்து இருக்கிறார், என்னில் கிறிஸ்து இருக்கிறார். இந்தக் கிறிஸ்து தான் நாம் ஐக்கியம்கொள்வதற்கான ஆதாரம். அவரை ஒதுக்கித்தள்ளிவிட்டால், நாம் ஐக்கியம் கொள்வதற்கு வேறு ஒன்றுமே இல்லை.

நாம் பெறுகிற கல்வியும், நாம் வாழ்கிற சுற்றுச்சூழலும், தனித்தனியே நம்மிடம் இருக்கும் இயற்கையான தாலந்தும் வித்தியாசமாக இருந்தாலுங்கூட, நம்மெல்லாருக்கும் பொதுவான ஒன்று இன்னும் இருக் கத்தான் செய்கிறது. நம்மெல்லாருக்குள்ளும் கிறிஸ்து வாசம்செய்கிறார் என்பதுதான் அந்தப் பொது வான ஒன்றாகும். நம்மில் வாசம்செய்கிற கிறிஸ்து ஒரே கிறிஸ்து; எனவே, நாம் ஒருவரோடொருவர் ஐக்கியம்கொள்ள முடியும். ஒரு குறிப்பிட்ட நபரிடம் திறமை இருக்கிறது, நல்ல மனநிலை இருக்கிறது அல்லது அவர் கனிவானவர், பண்பானவர் என்பதால் நீ அவருடன் ஐக்கியம்கொள்கிறாயா? நிச்சயமாக இல்லை. மக்களை ஆதாரமாகக்கொண்டு நீ ஐக்கியம்கொண்டால், நீ தலையை உறுதியாய்ப் பற்றிக் கொள்ளவில்லை; அதற்கு மாறாக, உன் ஐக்கியம் அப்சலோம் இஸ்ரவேல் மக்களிடம் கொண்டிருந்த ஒரு தொடர்பைப்போன்றதாகத்தான் இருக்கும். இப்படிப்பட்ட ஐக்கியம் மக்களை தாவீதிடமிருந்து பிரித்தது (2 சாமு. 15:1-17). இன்று இதுபோன்ற நடத்தை தலையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுதலாக இருக்க முடியாது.

கிறிஸ்தவர்களுக்கிடையேயுள்ள ஐக்கியம் கிறிஸ்துவோடு தொடர்புடைய ஐக்கியமாக இருக்க வேண்டும். தலைக்கு வெளியே ஐக்கியம்கொள்வதற்கு நமக்கு எந்த ஆதாரமும் கிடையாது. நாமெல்லாரும் தலையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டால், நம் ஐக்கியம் இயல்பானதாகவும், இலாபகரமானதாகவும் இருக்கும். இல்லையென்றால், ஐக்கியம் கெட்டுவிடும்.

கிறிஸ்தவன் என்ற முறையில் நீ எவ்வளவு தூரத்துக்குப் போவாய்? கர்த்தரை நீ கடைசிவரை பின்பற்று வாயா? ஒருவன் பின்வாங்கிப்போய் விழுந்துவிட்டால், அவருடனான உன் ஐக்கியம் பாதிக்கப்படாதா? முழு ஐக்கியத்தைப் பராமரிக்க, நாமெல்லாரும் நம் வாழ்நாள் முழுவதும் கர்த்தரைப் பின்பற்ற வேம் டும்; எல்லாரும் தலையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளும்போது மட்டுமே இது நிறைவேறும்.

**கிறிஸ்துவுடனான சேர்க்கைக்கான நிபந்தனைகள்**

தலையை உறுதியாய்ப் பற்றிக்கொள்வதற்கான நிபந்தனைகள் என்ன? ஒரு பக்கம், மாம்சத்தோடும், அதின் ஜென்மசுபாவமான ஜீவனோடும் ஆழமாக இடைப்பட நாம் சிலுவையை அனுமதிக்க வேண்டும்; மறு பக்கம், ஆவியானவருக்கேற்றபடி நடக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு, ஆரோக்கிய மான சரீர ஐக்கியத்தை நாம் அனுபவித்துமகிழ்வோம். ஜென்மசுபாவமான ஜீவனோடு சிலுவை இடைப் படாவிட்டால், நம்மால் சரீர வாழ்க்கையை வாழ முடியாது.

ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிற ஒரு கூட்டம் மக்களைப்பற்றி திரு வெளிப்பாடு பேசுகிறது (வெளி. 14:1-5). ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் நாம் அவரைப் பின் பற்றுகிறோம் என்று நம்மால் சொல்ல முடியுமா? சிலுவையே நாம் ஐக்கியம்கொள்வதற்கான கருவி என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. அது நம் மாம்சத்தோடு இடைப்படுகிறது; அது நம் சுய-ஜீவனை உடைக்கிறது; எனவே, ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் நாம் அவரைப் பின் பற்றலாம். கர்த்தருக்குமுன்பாக நமக்கு எந்தத் தடங்கலும் இல்லையென்றால், நாம் சபைக்கு எந்தத்

தடையும் ஏற்படுத்த மாட்டோம். கர்த்தருடன் நம் உறவு நேர்த்தியாக இருந்தால், சரீரத்தோடும் நம் உறவு நேர்த்தியாக இருக்கும். ஒவ்வோர் அவயவத்திற்கும் தலையுடன் நேரடியான உறவு இருக்கிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, நம் பௌதீக சரீரத்தில், இடது கையில் காயம் ஏற்பட்டுவிட்டால் அதற்கு உதவுவதற்கு தலை வலது கைக்குக் கட்டளைகொடுக்கிறது. வலது கை தானாகவே எந்த அசைவையும் ஏற்படுத்துவ தில்லை. கிறிஸ்துவின் சரீரத்திலும் இதுவே உண்மை. சரீரத்தின் அவயவங்களுக்கிடையேயுள்ள உறவு எல்லா நேரமும் தலையின்மூலமாகவே வருகிறது. ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனுக்கு உதவச் செல்லும்போது, அவன் தலையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தால், அவன் கர்த்தர் நிமித்தம் செல்லுகிறான் என்று பொருள்; இல்லையென்றால் அவன் வெறுமனே மனுஷீகப் பிரகாரமான நட்பினி மித்தம் செல்லுகிறான் என்று பொருள். தலையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டால், நாம் யாரோடும் நேரடியான உறவுவைத்துக்கொள்வதிலிருந்து காப்பாற்றப்படுவோம். இதனால், ஒரு சிலரிடம் மட்டும் நாம் ஒரு விசேஷமான உறவு வைத்துக்கொள்ள மாட்டோம். இதற்கு மாறாகச் செய்தால், நாம் பிரிவினையை அல்லது கட்சி மனப்பான்மையை ஏற்படுத்துவோம்.

தேவன் சபையில் பிரிவினையையோ அல்லது கட்சியோ அனுமதிப்பதில்லை. கட்சி என்றால் என்ன? சில கிறிஸ்தவர்கள் தலையை விட்டுவிட்டு வேறு ஏதோ ஒரு யுக்தியின்மூலம் தங்களுக்கிடையே நேரடியான உறவை ஏற்படுத்திக்கொள்ளும்போது அங்கு கட்சி உருவாகிவிடுகிறது. அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் ஒரு விசேஷமான உறவு வைத்திருக்கிறார்கள்; ஆனால், இந்த உறவு தலையிலிருந்து பிறக்கவில்லை. இதுதான் கட்சி.

இருந்தபோதும், கட்சியைவிட சமயக்குழு இன்னும் மோசமானது. சிலர் ஒருவரிடத்தில் ஒருவர் மிக நெருக்கமாக இருக்கிறார்கள்; அவர்கள் ஒருவரிடத்தில் ஒருவர் மிக இயற்கையாகவே கவர்ந்திழுக்கப்படு கிறார்கள்; எனவே அவர்கள் ஒரு சமயக்குழுவைத் தொடங்குகிறார்கள். ஆனால், சகோதர சகோதரி கள் தலையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டால், அவர்களுடைய இருதயங்கள் தலையின் இருதயத் தைப்போல் விசாலமாக இருக்கும். நாம் மெய்யாகவே ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர வேண்டும்; இருந்தபோதும் இந்தப் பரஸ்பர அன்புக்கு ஓர் அஸ்திபாரம் உண்டு; இது கிறிஸ்துவின் முழுச் சரீரத்துக் கும் சொந்தம். ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர வேண்டும் என்றால், சரீரத்தில் உள்ள எல்லா அவயவங் களிலும் அன்புகூர வேண்டும் என்று பொருள். சரீரத்தின் எல்லைக்குக் குறைவான எதையும் தேவன் அனுமதிப்பதில்லை. தலையை உறுதியாய்ப் பற்றிக்கொள்வதால் மட்டுமே, கிறிஸ்தவர்கள் கட்சிகளாகவும், சமயக்குழுக்களாகவும் பிரிந்து போகாமல், அவர்களால் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர முடியும்.